Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 516/2023**

**Deposition of PW.7 (LW.7)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமேஸ்வரன் | ஜாதி | : | |
| த/பெ | : | ராஜாங்கம் | தொழில் | : | சார்பு ஆய்வாளர், ஓய்வு |
| கிராமம் | : | விருவீடு | சமயம் | : | |
| தாலுகா | : | நிலக்கோட்டை | வயது | : | 61/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026.

(1, 2 எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் சார்பு ஆய்வாளராக பணியாற்றிவிட்டு ஓய்வு பெற்றுவிட்டு, தற்போது விருவீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 31.08.2020 அன்று சின்னாளபட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றியபோது அன்றையதினம் காலை 08.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, கனம் ஆத்தூர் குற்றவியல் நடுவர் அவர்கள் நீதிமன்றத்தில் இருந்து வந்த தபாலைப் பெற்று சின்னாளபட்டி காவல்நிலைய குற்ற எண்.839/2020, சட்டபிரிவுகள் 120(B), 294(b), 323, 441, 498-A, 506(1) IPC & 4 of TNPHW Act ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.4/PW.7)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 01.09.2020 அன்று காலை 08.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நூருல் ஹாசன், த.பெ. முகமது, தங்கப்பாண்டி, த.பெ. முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம், பார்வைமகசர் தயார் செய்தேன். அந்த மாதிரிவரைபடம் **(அ.சா.ஆ.5/PW.7)** ஆகவும், பார்வைமகசர் **(அ.சா.ஆ.6/PW.7)** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

அதன்பின் சாட்சிகள் திவ்யஸ்ரீ, ராம்ஜி, ராகவன், செல்லையா மற்றும் நூருல்ஹாசன், தங்கப்பாண்டி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்பு 01.09.2020 அன்று 120(B), 294(b), 323, 441, 498-A, 506(1) IPC & 4 of TNPHW Act சட்டபிரிவுகளில் இருந்து 294(b), 506(1) IPC ஆக மாறுதல் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார்

செய்தேன். அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை **(அ.சா.ஆ.7/PW.7)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன்பின்பு எதிரிகள் பார்த்தசாரதி, சந்தோஷ் ஆகியோர் நீதிமன்ற பிணையில் வந்துவிட்டனர். எதிரிகள் கணேசன் மற்றும் வீரலட்சுமி ஆகியோர்களை 01.05.2021 அன்று கைது செய்து காவல்நிலைய பிணையில் விடுவித்தேன். அதன்பின்பு விசாரணை முடித்து எதிரிகள் மீது 294(b), 506(1) IPC ன் படி 05.05.2021 இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்தாரரின் சொந்த அண்ணன் தான் பட்டியல் சாட்சி 2 ராம்ஜி என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 3 புகார்தாரரின் சித்தப்பா என்றால் அவர் உறவினர். பட்டியல் சாட்சி 4 புகார்தாரரின் மாமா என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 5, 6 சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள சாட்சிகள் இல்லை என்றால் சரிதான். சம்பவம் வாதியின் வீட்டிற்குள் நடந்ததாக தான் வரைபடத்திலும், பார்வைமகசரிலும் உள்ளது என்றால் சரியல்ல வீட்டின் முன்பு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்கள் சொல்வது போல் சம்பவ இடம் வீட்டிற்கு வெளியில் இல்லை என்றும், வீட்டிற்குள் தான் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

உங்களிடம் காட்டப்படும் பார்வைமகசரில் வீட்டில் தான் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அருகாமை சாட்சிகள் யாரையும் நீங்கள் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் தங்களுக்கு அவமானமாகவும், அறுவருப்பாகவோ இருந்ததாகவும், உயிர் பயம் இருந்ததாகவும் குறிப்பிட்டு வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்று பார்வைமகசரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

01.09.2020 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, 2023 ல் தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல 16.11.2022 ல் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு சம்பவம் உண்மை இல்லை என்பதால் தான் நீங்கள் காலதாமதாக பெயரளவில் இந்த குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. குவிமுச படி நீங்கள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த இறுதி அறிக்கையை தாக்கல் செய்யாததால் இந்த வழக்கில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2வது எதிரி 6 வருடத்திற்கு முன்பே விபத்தில் கால் ஊனமாகிவிட்டது என்றும், அவரால் எழுந்து நடக்க முடியாது என்ற விபரத்தை தெரிந்துகொண்டீர்களா என்றால் அவரால் நடக்க முடியும், சரியாக மட்டுமே நடக்க முடியாது. 2வது எதிரி இரு நபர்களின் துணை இல்லாமல் எழுந்து நிற்கக்கூட

முடியாது என்றும், நீங்கள் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

அ.சா.1 நீதிமன்றத்தில் கொடுத்த மனுவில் உள்ள சங்கதிகள் அடிப்படையில் அ.சா.1 ன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தவறானது என்று தெரிந்துகொண்டீர்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 நீதிமன்றத்தில் கொடுத்த புகாரின் படி 2ம் எதிரி புகார்தாரரின் வீட்டில் வந்து பிரச்சனை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் நீங்கள் உண்மையாக புலன் விசாரணை செய்திருந்தால் 2ம் எதிரி நடக்கமுடியாத நிலையில் இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய்யானது என்று புலனாகியிருக்கும் என்றால் சரியல்ல.

நீதிமன்றத்திலிருந்து முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யச் சொல்லி வரும் உத்தரவுகளில் நீங்கள் விசாரணை இன்றி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு எதிரிகளுக்கு காவல்நிலையத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பி நீங்கள் எதிரிகளிடம் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். போன் மூலமாக தகவல் சொல்லி வரவழைத்தோம். எதிரிகளை அழைத்து விசாரித்திருந்தால் இந்த வழக்கு பொய்யானது என்று தெரிந்திருக்கும் என்றும், இந்த இறுதி அறிக்கை தாக்கல் செய்யவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 வழக்கு சம்மந்தமாக வாக்குமூலத்தல் சொல்லியுள்ள நீதிமன்ற ஆவணங்களை இவ்வழக்கில் சேகரித்து நீங்கள் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். விவகாரத்து வழக்கு முடிந்துவிட்டதாக அ.சா.1 விசாரணையில் கூறினாரா என்றால் இல்லை நிலுவையில் உள்ளதாக கூறினார்.

உண்மையில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், நீதிமன்றத்திலிருந்து பதிவு செய்யச்சொல்லி வந்த வழக்கு என்பதால் உண்மைத்தன்மை அற்ற நிலையிலும், நீங்கள் பெயரளவிற்காக வழக்கு பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லப்பட்டுள்ள சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor